VOICE OF CITIZENS

CENTRE FOR POLICY ALTERNATIVES
විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය
மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

POLICY BRIEF

2023 / JANUARY

# கொள்கைத் தொகுப்பு

# இலங்கை ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்

## பிரசைகள் குரல் – ஜனவரி 2023

# கொள்கைத் தொகுப்பு

## இலங்கை ஆதிவாசிகளின் உரிமைகளைப் பாதுகாத்தல்

## பிரசைகள் குரல் – ஜனவரி 2023

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் ஐஐஐவது அத்தியாயத்தில் காட்டப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள்[1] ஒவ்வொருவரும் சிந்தனை செய்யும் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் மற்றும் மத சுதந்திரம், ஆளெவரும் சித்திரவதைக்கு அல்லது மனிதாபிமானமற்ற கொடூரமான இழிவான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு உட்படாதிருக்கும் சுதந்திரம். எதேச்சையாகக் கைது செய்யப்படாமலும் தடுத்து வைக்கப்படாமலும் அத்துடன் தண்டிக்கப்படாமலும் இருப்பதற்கான சுதந்திரமும் கடந்த காலத்தை உள்ளடக்கும் பயனுடையனவான தண்டனைச் சட்டவாக்கங்களைத் தடைசெய்தலும். பேச்சுச் சுதந்திரம், ஒன்றுகூடுவதற்கான சுதந்திரம், ஒருங்கு செய்வதற்கான சுதந்திரம் முயற்சி செய்வதற்கான சுதந்திரம், தடையின்றி நடமாடுவதற்கான சுதந்திரம் மற்றும் தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம் என்பவற்றைப் பாதுகாக்கின்றன.

எவ்வாறாயினும், ஊவா, வடமத்தி, கிழக்கு, சபரகமுவ மற்றும் வடக்கு மாகாணங்கள் உள்ளடங்கலாக எனினும் அவற்றுடன் மட்டும் மட்டுப்படாது, நாடு முழுவதும் வாழும் ஆதிவாசிகளுக்கு, அவ்வடிப்படை உரிமைகளை அனுபவிப்பதற்குச் சாதகமான சமூக, பொருளாதார மற்றும் அரசியற் பின்புலமொன்று இருக்கின்றதா? பொதுவாக மனிதர்களின் உரிமைகள் தொடர்பில் முடிவில்லாத பிரச்சனைகளும் சவால்களும் காணப்பட்டாலும், சமமான உரிமைகளுள்ள பிரசைகள் என்ற வகையில் தாம் பணிகளை ஆற்றுகின்ற போது 'ஆதிவாசி' மக்கள் என்ற பொருள்கோடலுக்கு உரித்தாகின்ற பிரசைகளும் 'ஆதிவாசி' என தம்மை அறிமுகம் செய்து கொள்ள விரும்புபவர்கள் ஏனைய பிரசைகளைக் காட்டிலும் ஆபத்துகளுக்கும் சவால்களுக்கும் முகங்கொடுக்கின்றனர். அரசியலமைப்புச் சட்டத்தின் 12(2)ம் உறுப்புரையில் குறிப்பிடப்படுகின்றவாறு, இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியற் கொள்கை அல்லது பிறப்பிடம் காரணமாக அல்லது அத்தகைய காரணங்களுள் எந்த ஒன்று காரணமாகவும் எந்தப் பிரசையும் ஓரங்கட்டப்படலாகாது. பக்கச்சார்பு, மற்றும் ஓரங்கட்டுதலானது வெறுமனே அடிப்படை உரிமைகளில் ஒன்றை அல்லது சிலவற்றை மீறுவதோடு மட்டுப்படாததுடன், அவை அவர்களின் சமூக, பொருளாதார, கலாசார, குடியியல் மற்றும் அரசியல் வாழ்க்கை ஆகிய துறைகளில் உரிமைகள் மீதான பல பிரச்சனைகளுக்கு வழிவகுக்கின்றது.

ஐக்கிய நாடுகளின் ஆதிவாசி மக்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் (A/RES/61/295)[2] ஊடாக உலகம் முழுவதுமான ஆதிவாசிகளின் உரிமைகள் சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளதுடன், அவர்களின் இன அடையாளங்களை இல்லாமற் செய்வது, அவர்களின் வசிப்பிடங்கள், பிரதேசங்கள் அல்லது வளங்களை அவர்களிடமிருந்து அகற்றுவது, மற்றும் அவர்களுக்கு எதிராக ஏதேனுமொரு இன அல்லது இனரீதியான மாற்றத்தை ஏற்படுத்தும் நோக்கம் அல்லது அழுத்தும் விடுக்கப்படுகின்ற செயல்களைத் தடுப்பதற்கான பயனுள்ள பொறிமுறையொன்றை வழங்குவதற்காக அங்கத்துவ நாடுகளிடம் வலுவான கோரிக்கையொன்றை விடுத்துள்ளது.

இலங்கை ஆதிவாசி மக்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனத்திற்கு (A/RES/61/295) சார்பாக வாக்களித்திருந்தாலும்,[3] நிலைப்பாடு, அடையாளம் மற்றும் உரிமைகளைத் தெளிவாக ஏற்றுக் கொள்ளும் குறிப்பிட்ட கொள்கைக் கட்டமைப்போ சட்டரீதியாகப் பிணைக்கப்பட்டுள்ள கருவியோ இல்லாதிருப்பது இவ் ஆதிவாசி மக்கள் தொடர்ந்து அடக்குமுறைக்கும் பக்கச்சார்பான கவனிப்புகளுக்கும் ஆளாக்குகின்றது. மேலும், ஆதிவாசிகளின் உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் எந்தவொரு ஏற்பாட்டையோ, 1989 ஆதிவாசிகள் மற்றும் பழங்குடிமக்கள் உடன்படிக்கையின் (இலக்கம் 169)[4] எந்தவொரு ஏற்பாடும் தேசிய சட்ட அல்லது கொள்கைக் கட்டமைப்புக்குள் மாற்றப்பட்டு, நிறைவேற்றப்படவில்லை. எனவே, கொள்கை வகுப்பாளர்கள், சட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதிகாரிகள் மற்றும் நிருவாகிகள் ஆகிய இருபிரிவிலும் சில ஒத்துணர்வற்ற தொலைநோக்கற்ற, தன்னிச்சையானதும்

---

[1] https://www.parliament.lk/files/pdf/constitution.pdf

[2] https://www.un.org/development/desa/indigenouspeoples/wp-content/uploads/sites/19/2018/11/UNDRIP_E_web.pdf

[3] https://digitallibrary.un.org/record/609197?ln=en

[4] https://www.ilo.org/dyn/normlex/en/f?p=NORMLEXPUB:12100:0::NO::P12100_ILO_CODE:C169

சிலவேளைகளில் வேண்டுமென்றே பக்கச்சார்புடன் நடத்தும் செயல்கள் காரணமாக இலங்கையில் ‘ஆதிவாசி’ மக்களின் நிலைப்பாட்டில் காணப்படும் ஆபத்து தீவிரமடைந்துள்ளது.

இந்த சுருக்கக் குறிப்பின் மூலம் இலங்கையின் ‘ஆதிவாசி’ மக்கள் முகங்கொடுக்கின்ற அடிப்படைப் பிரச்சனைகள் தொடர்பான சாராம்சமொன்றைப் பெற்றுத் தருவதற்கும் அப்பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காக உத்தேசிக்கப்பட்ட கொள்கை ரீதியான இடையீடுகளை முன்வைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

## இலங்கையின் ஆதிவாசி மக்கள் முகங்கொடுக்கின்ற அடிப்படைப் பிரச்சனைகள்

- ➔ இலங்கையில் பல்வேறு ஆதிவாசி மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நபர்களுக்கான முறையான சட்டரீதியான அல்லது சட்டவாக்க ரீதியான அங்கீகாரம் இல்லாதிருத்தல். அவ்வாறான அங்கீகாரம் ஆதிவாசி மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துகைகளில் உள்ளடக்கப்பட வேண்டும்.

- ➔ ஆதிவாசி மக்களின் தனிச் சிறப்பு வாய்ந்த, பொருளாதார, சமூக, கலாசார[5] சிவில் மற்றும் அரசியல் உரிமைகள்[6] பாதுகாக்கப்படவும் மேம்படுத்தப்படவும், தெளிவாக ஒதுக்கீடுகளை வழங்கும் குறிப்பிட்ட சட்டங்கள் வகுக்கப்படாமை.

- ➔ ஆதிவாசி மக்களின் குடியியல், அரசியல், சமூக-பொருளாதார மற்றும் கலாசார உரிமைகள் மீது ஒத்துணர்வற்று சட்டத்தை நடைமுறைப்படுத்துதல், பிரதானமாக அவர்களின் வாழ்வாதாரம் தொடர்பிலுள்ள உரிமை உள்ளிட்ட, அவர்களின் நிலைப்பாடு மீது சமமற்ற அழுத்தங்களை ஏற்படுத்தும்.

- ➔ நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு ஆதிவாசி மக்களின் வலுவானதும் இற்றைப்படுத்தப்பட்டதுமான சமூக-பொருளாதார பார்வைக் கோணமொன்று இல்லாத காரணத்தால் அவர்களின் அங்கீகாரமற்ற நிலையால், அவர்கள் ஓரங்கட்டபட்டு விளிம்பு நிலைக்கு தள்ளப்படுகின்றார்கள். அதனூடாக மக்கள் தொடர்ச்சியாக பக்கச் சார்புகளுக்கு உள்ளாகின்றார்கள்.

- ➔ ஆதிவாசி மக்களின் உரிமைகள் அவர்களின் உரிமைகளுக்காக முன்வரும் பலவீனமான சமூகம் சார்ந்த அமைப்புகளிலேயே மீறப்படுகின்ற போது துன்பதுயரங்களை தீர்க்கும் பொறிமுறையும் நியாயமான வழக்கு விசாரணையொன்றும் இல்லாமை. அதனால் அவர்கள் அநீதிக்கு ஆளாகும் ஆபத்தைத் தடுக்க முடியாது.

- ➔ நிருவாக ரீதியான தீர்மானங்கள், சிலவேளைகளில் அரசியல் தேவைகளின் மீது, செயற்படக் கூடியதாக இருப்பதுடன், ஆதிவாசி மக்கள் தமது சுய கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் அவர்களின் மொழியைப் பாவிப்பதற்கு, தொழிலில் ஈடுபடும் மற்றும் பயணிக்கும் உரிமைக்கு இத்தால் நேரடியாக அல்லது மறைமுகமான விளைவுகளை ஏற்படுத்தும். மேலும், அவர்களின் பிரசாவுரிமையை உறுதிப்படுத்தும் போதும், அதனூடாக பொதுவான சேவைகளை அணுகும் போது அரச தரப்பில் நிறுவன ரீதியான அங்கீகாரம் இல்லாமை பெரும் தடையாக அமைவதுடன் அவர்கள் அப்புறப்படுத்தப்பட காரணமாகின்றது.

- ➔ பொதுவாக, அரசியலமைப்பில் அடிப்படை உரிமைகளில் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளப்படாதிருப்பினும், ஆதிவாசி மக்களின் வாழ்வாதார உரிமைகள் இயற்கை வளங்களுடன் நெருக்கமாக தொடர்புபட்டுள்ளன. குறிப்பாக அவர்களின் வசிப்பிடங்கள், அல்லது மூதாதையாளர்களின் வாழ்விடங்களில், அவர்கள் அமைதியாக வாழப் பொருத்தமான சூழலொன்றை உறுதிப்படுத்துவதற்காக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும். அமைதியாக வாழ்கின்றார்கள். எவ்வாறாயினும், அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிருவாகத் தீர்மானங்கள் உள்ளிட்ட பல காரணங்களால் வனசீவிகள் பாதுகாப்புத் திணைக்களம், சுற்றாடல் அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, காணி அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம், ஆயுர்வேத திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம், மற்றும் மீன்பிடித்

[5] https://www.ohchr.org/sites/default/files/cescr.pdf

[6] https://citizenslanka.org/wp-content/uploads/2015/12/International-Covenant-on-Civil-Political-Rights-ICCPR-Act-No-56-of-2007E.pdf

திணைக்களம் என்பன ஆதிவாசி மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டிய முக்கியத்துவம் தொடர்பில் கூருணர்வின்றியிருத்தல் காரணமாக அவர்களின் பரம்பரை ரீதியான செயற்பாடுகளில் ஈடுபடுவதில் எல்லையற்ற தடைகள் விடுக்கப்பட்டுள்ளதுடன் அத் தொழிற் சுதந்திரத்திற்கான அடிப்படை உரிமை மற்றும் ஆதிவாசிகளின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் கொள்கை ரீதியான நிலைப்பாடுகளையும் ஐடுமு வின் ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி மக்கள் உடன்படிக்கையையும் மீறுவதாகும். உதாரணமாக மீன்பிடித்தல், தேனி வளர்ப்பு, மற்றும் சேனைப் பயிர்ச் செய்கை உள்ளிட்ட வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுதல் தொடர்பில் ஆதிவாசி மக்களுக்கு உரித்தான உறுப்பினர்களைக் கைது செய்து சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்படும் சம்பவங்களை அடிக்கடிக் காணக் கூடியதாகவுள்ளது.

## கொள்கை மற்றும் பாவனைக்கு ஏற்புடைய மறுசீரமைப்புக்கான முன்மொழிவுகள்

1. சட்டவாக்கம் அல்லது கொள்கைக் கட்டமைப்பின் ஊடாக அல்லது இலங்கையில் காணப்படும் ஆதிவாசி மக்கள் இனங்காணப்படாத குறைபாடும் ஆதிவாசி மக்கள் மற்றும் அவர்களின் மனித உரிமைகள் மீதான தீங்கான விளைவுகளை கருத்திற் கொண்டு, அரசால் மேற்குறித்த குழுக்களின் பரிந்துரைகள் மீதான குறிப்பிட்ட சட்டமூலங்களை ஆரம்பித்தல். அதனால் ஆதிவாசி மக்களின் சமமான பிரசாவுரிமைக்கான உரிய அங்கீகாரம் உறுதிப்படுத்தப்படுகின்றது. அவ்வாறான சட்டங்கள் மூலம் வனசீவராசிகள் பாதுகாப்பிற்கு ஏற்புடையதாகக் காணப்படும் சில சட்ட மீளாய்வுகளை நடத்த வேண்டும்.

2. ஆதிவாசி மக்களின் உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் ஏற்பாடுகளுக்கு மதிப்பளிப்பதற்கு அரசின் அர்ப்பணிப்பு முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டு ஆதிவாசி மற்றும் பழங்குடி மக்கள் உடன்படிக்கை, 1989 (ஐடுமு உடன்படிக்கையை 169) அங்கீகரிப்பதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

3. இலங்கையின் ஆதிவாசி மக்களுக்கு உரித்தான பல்வேறு மக்கள் குழுக்கள் முகங்கொடுக்கின்ற, ஏற்படுகின்ற பிரச்சனைகள் மற்றும் சவால்களை மீளாய்வு செய்வதற்கான மேலும் பொருத்தமான பிரிவு ரீதியான கண்காணிப்புச் செயற்குழுவின் கீழ், அரசாங்கத்தால் பாராளுமன்ற உபகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். மேலும், அவ்வாறான உபகுழுவால் நியமிக்கப்பட வேண்டிய 'இலங்கையின் ஆதிவாசி மக்களின் உரிமைகள் தொடர்பான சுயாதீன குழு' மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற அறிக்கைகள் மீது கவனம் செலுத்தப்பட வேண்டும்.

4. ஆதிவாசி விரிவான வரைவிலக்கணத்தின் ஒரு பகுதியாக இப்போது இனங்காணப்பட்டுள்ள காணப்படுகின்ற பல்வேறு மக்கள் குழுக்களின் சமூக-பொருளாதார கோணங்கள் தொடர்பான விரிவான கணக்கெடுப்பொன்றை நடத்தும் ஆணையுடன் இலங்கையின் ஆதிவாசி மக்களின் உரிமைகள் தொடர்பில் சுயாதீன குழுவொன்றை அரசு மூலம் நியமிக்கப்பட வேண்டும். அவ்வாறான குழுவொன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிரதிநிதிகள், ஆதிவாசிகள் குழுக்கள் வாழும் புவியியல் ரீதியான இடங்களில் மாவட்ட மற்றும் பிரதேச நிருவாகங்களில் ஏற்புடைய பிரதிநிதிகள், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம், சுற்றாடல் அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், மகாவலி அபிவிருத்தி அதிகாரசபை, காணி அமைச்சு, தொல்பொருளியல் திணைக்களம், கலாசார அலுவல்கள் திணைக்களம், ஆயுர்வேத திணைக்களம், மீன்பிடித் திணைக்களம், கல்வி அமைச்சு மற்றும் ஏனைய எந்தவொரு ஏற்புடைய அதிகாரசபையொன்றின் பிரதிநிதிகளுடன் கூடியதாக இருத்தல் வேண்டும். இந்த குழு அறிக்கைக்கு நாடு முழுவதுமான ஆதிவாசி மக்களின் பரவலை வரைபடமாக்குதலும் அந்த மக்கள் முகங்கொடுக்கும் ஆற்றுப்படுத்தல் மூலம் உருவான சாட்சிகளை அடிப்படையாகக் கொண்ட தரவுகளுடனும் தகவல்களுடனும் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சனைகள் பற்றிய பகுப்பாய்வொன்று உள்ளடக்கப்பட வேண்டும்.

5. உள்நாட்டலுவல்கள் அமைச்சு, 'இலங்கையின் ஆதிவாசி மக்களின் உரிமைகள் தொடர்பான சுயாதீன குழுக்கள்' மற்றும் அப் பாராளுமன்ற உபகுழுவுடன் நெருக்கமான ஒருங்கிணைப்பில், குறுகிய கால தீர்வாக, மாவட்ட மற்றும் பிரதேச மட்டத்திலான நிருவாகத்தின் மீது விசேட கவனத்தை செலுத்தி, அரச உத்தியோகத்தர்களுக்கான நெறிமுறைக் கட்டமைப்பொன்றை வடிவமைக்க வேண்டும். ஆதிவாசி மக்களுக்காக தொடர்ச்சியாக பக்கச்சார்புடன் கவனிக்கப்படுவதற்கு எதிராக போராடுவதற்கும் அவர்களின் சமத்துவத்திற்கான உரிமைக்கு மதிப்பளித்து பொது சேவைகளை வழங்குவதற்கு நிலையான நடவடிக்கையொன்றுக்கான தேவை பற்றி அவர்களை அறிவூட்டுதல்.

6. இலங்கையின் ஆதிவாசி சமூகங்களைச் சேர்ந்த பல்வேறு சமூகக் குழுக்கள் எதிர்கொள்ளும் எழும் பிரச்சினைகள் மற்றும் ஒரு துறை கண்காணிப்புக் குழுவின் கீழ் உள்ள அரசு சவால்களை மதிப்பாய்வு செய்வது சிறந்தது பாராளுமன்ற துணைக் குழு நியமிக்கப்பட்டும்- மேலும், அத்தகைய துணைக் குழுவை நியமிக்க வேண்டும் "இலங்கையில் உள்ள ஆதிவாசி சமூகங்களின் உரிமைகளுக்கான சுயாதீனக் குழு" உருவாக்கப்படல் வேண்டும் என்பது அறிக்கைகளில் குறிப்பிடப்பட வேண்டும்

7. ஆதிவாசி மக்களின் உரிமைகளை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் குடியியல், அரசியல், சமூக-பொருளாதார மற்றும் கலாசார உரிமைகளைப் பாதுகாப்பதற்காக மாகாண அரசாங்கம், மற்றும் உள்ளூராட்சி அதிகாரசபைகளால் சாசனங்கள் மற்றும் இடைக்காலச் சட்டங்களைத் தயாரிப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும்.

8. மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம், ஏற்புடைய மாவட்ட நிருவாகத்துடன் ஒருங்கிணைப்புடனும் ஒத்துழைப்புடனும் ஏனைய தொகுதியின் கீழ், ஆதிவாசி மக்கள் தொகையின் எண்ணிக்கையை உள்ளடக்கும் சாத்தியத்திற்குப் பதிலாக ஆதிவாசி மக்கள் தொடர்பில் தரவுகளைச் சேகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். பால் நிலைக்கு ஏற்ப, ஒதுக்கப்பட்ட தரவுகளைச் சேகரித்து ஆவணப்படுத்த வேண்டும். மேலும், நாடு முழுவதும் ஆதிவாசி மக்களின் பரவலை புரிந்துகொள்ளுவதற்கு மாவட்ட மட்டத்திலான தரவுகளைச் சேகரிக்கும் செயற்பாடுகளை நடத்துமாறு மாவட்ட செயலாளர்கள் மாவட்ட மட்டத்திலான மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் புள்ளிவிபரவியலுக்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களிடம் கோர வேண்டும். ஆதிவாசி மக்களை முக்கியமற்றவர்களாகக் கருதும் அரச உத்தியோகத்தர்களினதும் கொள்கை வகுப்பாளர்களினதும் மனப்பாங்குகளை மாற்ற வேண்டும்.

9. ஆதிவாசி மக்கள் தேசிய மக்கள் தொகைக் கணக்கெடுப்பிற்கு இன ரீதியான குழுவொன்றாக உள்ளடக்கப்படாததற்கு எடுக்கப்பட்ட தீர்மானமே, பக்கச்சார்பு மற்றும் ஓரங்கட்டுதல் தொடர்பான உதாரணமாக இருப்பதுடன், ஆதிவாசி மக்களின் அடையாளம் உலகளாவிய ரீதியில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. ஆதிவாசிகளின் உரிமைகள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் பிரகடனத்தின் 8(2)(அ) வாசகத்தில் இது தொடர்பில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது 'குறிப்பிட்ட மக்கள் என்ற வகையில் அவர்களின் தொடர்ச்சியான நிலைப்பாடு அல்லது அவர்களின் கலாசார விழுமியங்கள் அல்லது இன அடையாளங்களை இழக்கச் செய்யும் நோக்கம் அல்லது அழுத்தத்தை ஏற்படுத்தும் எந்தவொரு செயலும்' என்பதாகும். இதற்கேற்ப, ஆதிவாசி மக்களின் அங்கீகாரத்தை உறுதிப்படுத்துவதற்காக அரசு இயன்ற அனைத்து முறைகளில் பொருத்தமான நிலையான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

10. காணி அமைச்சு, பிரதானமாக விவசாயம் மற்றும் வனசீவிகள் மற்றும் வளப் பாதுகாப்பு அமைச்சு (வனசீவிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் வனசீவிகள் திணைக்களம்) உள்ளிட்ட மாவட்ட நிருவாகம் மற்றும் ஏனைய ஏற்புடைய அதிகாரிகளுடன் ஒத்துழைப்புடன் ஆதிவாசி மக்களின் பரம்பரை மரபுரிமைகளை மீளாய்வு செய்ய வேண்டியதுடன் காணிகள் மற்றும் நீருக்கான அவர்களின் உரிமையை இழக்கச் செய்யும் தான்தோன்றித்தனமான நிருவாகத் தீர்மானங்களை நிறுத்த வேண்டும். 1989 ஆதிவாசிகள் மற்றும் பழங்குடி மக்களின் உடன்படிக்கையின் 14வது வாசகம் (ஐடுழு உடன்படிக்கை 169)க்கு ஏற்ப, 'ஆதிவாசிகளின் மரபுரீதியாக வாழும் மற்றும் உரித்துக் கோரும் காணிகளின் உரிமையும் உரித்துடைமையும் அரசால் ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்.' மேலும் அவர்களின் காணிகளில் உரிமைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு தேசிய சட்டக் கட்டமைப்பொன்றில் போதுமான செயல்முறைகளைத் தாபிக்க வேண்டும்.

11. ஆதிவாசி மக்களின் பரம்பரை ரீதியான வசிப்பிடங்களும் அவர்களின் வாழ்வாதார நடவடிக்கைகளில் ஈடுபடுவதைத் தடுக்கும் மற்றும் பாவனைக்கு நியாயமற்ற முறையில் தடைவிதிக்கின்ற விலங்கினங்கள் மற்றும் தாவரங்களைப் பாதுகாக்கும் கட்டளைச் சட்டம், வனப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், கடற்கரைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் ஏனைய சட்டங்களும் கொள்கைகளும் உள்ளிட்ட எனினும் அவற்றுக்கு மட்டும் மட்டுப்படாது காணப்படும் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கு அரசு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். ஆதிவாசி மக்களின் அடிப்படை உரிமைகளை தாழ்த்துகின்ற மற்றும் அவர்களின் நிலைப்பாட்டை ஆபத்தில் வீழ்த்துகின்ற தற்காலிக ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளை விதிப்பதற்குப் பதிலாக அவ்வாறான சட்டங்களை பயனுள்ளவாறு நடைமுறைப்படுத்தல் மனித செயற்பாடுகள் முறையாக ஒழுங்குபடுத்தப்படுவதை உறுதிப்படுத்துதல் ஏற்புடைய அரச அதிகாரிகளின் பொறுப்பாகும்.

12. நுண்கடன், நுண்கடன் மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத கடன் வழங்கும் நடவடிக்கைகள் இலங்கை மத்திய வங்கி மற்றும் பிறவற்றின் காரணமாக வேடுவச் சமூகங்கள் மீதான தாக்கத்தை மதிப்பிடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். கூடுதலாக, அங்கீகரிக்கப்படாத நபர்கள் மற்றும் நிறுவனங்கள் வேடுவச் சமூகங்கள் கடன் வாங்குபவர்களை உருவாக்கி, பின்னர் அவர்களின் அசையும் மற்றும் அசையா சொத்துக்களை கடன் வழங்குபவர்களுக்கு வழங்குதல் அல்லது அத்தகைய நிறுவனங்கள் கலைப்பதன் மூலம் தங்கள் சொத்துக்களை இழப்பதைத் தடுக்க உடனடியாக அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். நுண்கடன் பிரச்சினைக்கு தீர்வு காண்பதில், ஆதிவாசி சமூகத்தின் பன்முகப் பிரச்சனைகளும் தீர்க்கப்படுகின்றன. நிலம், வாழ்வாதாரம், அடையாளம் மற்றும் கலாச்சாரம் என்பதால் கவனம் அவசியம் நுணுக்கமாக பின்னிப் பிணைந்து பிரிக்க முடியாதவை. ஏதேனும் அர்த்தமுள்ள அவர்களின் இருப்புக்கும் அவர்கள் அனைத்திற்கும் அடிப்படையான ஒரு நிலையான தீர்வை அடைவதற்கு நம்பிக்கைகள், பழக்கவழக்கங்களுக்கு மையமான அவர்களின் நிலங்களுக்கு இடையேயான ஆழமான மற்றும் சிறப்பு வாய்ந்த தொடர்புக்கு முழு மீறல்கள் மற்றும் மீறல்களை அவற்றின் கட்டமைப்பில் உணர்திறனுடன் கருத்துகள் மற்றும் மரபுகள் மற்றும் கலாச்சாரம பார்க்க வேண்டும். ஐடுமு எண். 169 ஐக்கிய நாடுகளின் உரிமைகள் (ருனுேசுஜீ) பிரகடனத்தில் காணப்படும் பழங்குடி மக்கள் மக்களின் குறிப்பிட்ட உரிமைகள் கூட்டு உரிமைகளாக மாற்றப்பட வேண்டும்.

13. இயற்கையான வளங்களை அழிக்கும் குற்றவாளிகளுக்கு எதிரான ஆதிவாசிகளின் பணிப்பொறுப்பை அரசு இனங்காண வேண்டும். மேலும் நாடுபூராகவும் உள்ள ஆதிவாசி மக்கள் அவர்களின் வசிப்பிடங்கள் மற்றும் வாழ்வாதாரங்களும் சுற்றாடற் தொகுதிகளைப் பாதுகாக்கும் நோக்குடன் விதிக்கப்பட்டுள்ள சட்டங்களும் கொள்கைகளும் மீது மேலும் ஒத்துணர்வைக் கொள்வதற்கான அறிவூட்டலை மேம்படுத்துவது உட்பட நிலையான நடவடிக்கைகளை ஆரம்பிக்க வேண்டும். அவ்வாறான இடையீடுகள் ஊடாக ஆதிவாசி சமூக உறுப்பினர்கள் குறைவாக இருக்கும் காரணத்தால் மட்டும் அவர்கள் ஏனைய சமூகங்களின் வாழ்க்கை மட்டத்தை உள்வாங்கும் ஆபத்து அதிகரிப்பதை தடுத்தல் வேண்டும்.

14. ஆதிவாசி மக்களின் நிலைப்பாடு தொடர்பில் தோன்றுகின்ற பிரச்சனைகளைப் பேசும் 'பிரச்சனைகளை அடிப்படையாகக் கொண்ட' அணுகுமுறை அரசால் நிறுத்தப்பட வேண்டியதுடன் அதற்குப் பதிலாக அம்மக்களுக்கு தாங்களே இந்த நிலத்தின் பிரசைகளில் ஒரு பகுதியினர் எனக் கருதுவதை நிரூபிப்பதற்காக' கொள்கை அடிப்படையிலான' அணுகுமுறையொன்றை பின்பற்றுவதற்கான அரசியல் விருப்பத்தைக் காட்ட வேண்டியதுமான அவர்களின் தனித்துவம், சுயநிர்ணயம், குறிப்பிட்ட வசிப்பிடங்கள், மூதாதையர்களின் பிரதேசங்கள், பிரதானமாகக் காணிகள், மற்றும் நீர், மொழி மற்றும் கலாசாரப் பாவனைகள் உள்ளிட்ட இயற்கை வளங்கள் மீதான அணுகலுக்கு அரசின் அங்கீகாரம் அவசியமானது.

VOICE OF CITIZENS

Centre for Policy Alternatives

විකල්ප ප්‍රතිපත්ති කේන්ද්‍රය

மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

www.facebook.com

www.twitter.com

www.youtube.com